# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம்



## புருஷார்த்தகாஷ்டை

### குறிப்புகள்

ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: அஸ்மத் ஸர்வ குருப்யோ நம:
சரணாகதன் இங்குள்ள காலம் இருக்க வேண்டிய முறை
புருஷார்த்தகாஷ்டாதிகாரம் (குறிப்புகள்) - ஸ்வாமி தேசிகன் அருளிய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம்

இப்படி, மோக்ஷத்திற்காக சாஸ்த்ரத்தில் விதித்த சரணாகதியை ஒரு ஸதாசார்யன் மூலமாக அனுஷ்டித்த ஒரு சரணாகதன், ஸ்வ நிஷ்டையுடன் இருந்து கொண்டு, இங்குள்ள காலம் உத்தரக்ருத்யத்தைச் செய்து கொண்டு இருக்கும்போது, அவன் அறிய வேண்டிய பகவத் கைங்கர்யமான பலனுக்கு எல்லையாக அமைவது பாகவத கைங்கர்யம் என்பதை விளக்கும் அதிகாரம் புருஷார்த்தகாஷ்டாதிகாரம் (புருஷார்த்தம் என்றால் பலன்; காஷ்டை என்பது அதன் எல்லை). அதை ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம் என்ற க்ரந்தத்தில், 16வது அதிகாரமான 'புருஷார்த்த காஷ்டா அதிகாரத்தில்' விவரிக்கிறார் ஸ்வாமி தேசிகன்.

இந்த அதிகாரத்தின் சுருக்கத்தை ஒரு ஸம்ஸ்க்ருத காரிகை மூலம் முதலில் தெளிவு படுத்துகிறார்.

1. 'ஸ்வதந்த்ர ஸ்வாமித்வாத் ஸ்வபஹுமதி பாத்ரேஷு நியதம் ஸ்ரீய: காந்தோ தேவ: ஸ கலு விநியுங்தே சிதசிதௌ. யதா லோகாம்நாயம் யதிபதி முகை: ஆஹிததியாம் ததௌ ந: கைங்கர்யம்  ததபிமத பர்யந்தம் அபவத்' அதாவது, 'ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், தான் ஸ்வதந்த்ரனாகவும் ஸ்வாமியாகவும் இருப்பதால், அனைவரையும் தன் மதிப்பிற்குரிய பாகவதர்கள் விஷயத்தில் நிரந்தரமாக சேஷமாக்குகிறான் (பணி புரியச் செய்கிறான்) என்கிறது சாஸ்த்ரங்கள்'.

2. ' பஹூநாம் ஜன்மநாமந்தே க்ஞானவான் மாம் ப்ரபத்யதே. வாஸுதேவ ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:' என்று ஸல்வேஸ்வரனான கண்ணன் கீதையில் அருளியபடி, 'வாஸுதேவனே ஸர்வமும் என்ற எண்ணம் பல புண்ய ஜன்மாக்களுக்கு பிறகு வருகிறது. அப்பேர்ப்பட்ட ஞானியான மஹாத்மா கிடைப்பது அரிது.'

3. சாஸ்த்ரங்கள் மிக தெளிவாக தத்வங்களை மூன்றாக பிரித்து விளக்குகிறது:

# சேதனம் - ஞானம் உள்ளவன்;

# அசேதனம் - ஞானம் அற்றது ;

# ஈச்வரன் - அனைத்து சேதன, அசேதனங்களையும் தன் வசத்தில் கொண்டு ஆள்பவன்.

இந்த மூன்று தத்வங்களையும் அது அதற்கே உரிய அசாதாரண தன்மைகளை கொண்டு சாஸ்த்ரங்கள் விளக்குகின்றன. சேதனம் மற்றும் அசைதன வஸ்துக்களில் ஓரளவு தெளிவு இருந்தாலும் ஈச்வரன் விஷயத்தில் சாதாரணமாக தெளிவு பிறப்பதில்லை.

4. ஒரு பெரிய பன்னாட்டு நிறுவனத்தில் வேலை பார்க்கும் ஊழியர்கள், அந்த நிறுவனத்தின் சொந்தக்காரர் யார் என்று அறியாமலே, தனது உயர் அதிகாரியையே நிறுவனத்தின் சொந்தக்காரராக நினைப்பவரையும் இங்கு நாம் காண்கிறோம் அல்லவா? அது தவறு என்பதில் ஐயம் இருக்க முடியாது. அது போல, சாஸ்த்ர உதவியும் அற்று ஒரு தத்வ தர்ஷினியான ஆசார்ய உபதேசத்தையும் எதிர் கொள்ளாமல், தன்னை விட உயர் நிலையில் உள்ள ப்ராக்ருத லோகத்தில் இருக்கும் தேவதைகளையே ஈச்வரனாக எண்ணுபவர்களும் இங்கே இருக்கத்தான் செய்கிறார்கள். அது சாஸ்த்ரத்திற்கு பொருந்தாத கூற்று. இந்த மாதிரியான எண்ணம் பல ஜன்மங்களில் இருந்து வருவதால், அதை எளிதில் அகற்றிவிட முடியாது.

5. இதை கண்ணன் கூறும் போது, பல புண்ய ஜன்மங்களுக்கு பிறகு, வாஸுதேவனே ஸர்வேஸ்வரன் என்ற எண்ணம் வருகிறது என்று கூறுகிறான். அதாவது, வாஸுதேவனே பரம் பொருள், நமது ஆராதனத்தை ஏற்றுக் கொள்ள தகுதி உடையவன், ஸர்வ பலனையும் கொடுக்க சக்தி கொண்டவன், துக்கமயமான சம்சார பந்தத்திலிருந்து முற்றிலுமாக விடுபடுத்தி ஸுக ரூபமான மோக்ஷத்தை அளிக்க அவன் ஒருவனே உபாயம் (வழி), மற்ற அனைவரும் அவனை விட, தன்மையிலும் மற்றும் செயல்களிலும், தாழ்ந்தவர்களே என்ற எண்ணம்.

7. அந்த ஸர்வேஸ்வரனான வாஸுதேவனின் ஸ்வரூப, ஸ்வபாவங்களை உள்ளபடி அறிந்து, அவனுக்கு நாம் கைங்கர்யம் (அடிமைத் தொழில்) செய்ய வேண்டிய நிலையை சரிவர உணர்ந்து இருப்பவனான ஞானியை, மஹாத்மா என்று கண்ணன் கொண்டாடுகிறான்.

8. அந்த தெளிந்த ஞானமும் அதற்கேற்ற செயலும் கொண்ட மஹாத்மாவான ஞானியை, பாகவதர்கள் என உணர்ந்து, பகவத் கைங்கர்யத்துக்கு எல்லையாக அமைவது பாகவத கைங்கர்யம் என விளக்கும் அதிகாரம் புருஷார்த்தகாஷ்டாதிகாரம்.

பகவத் கைங்கர்யம் பாகவத கைங்கர்யம் வரை என்று சொல்லப்படுவதன் காரணம்:

1. ஒரு சரணாகதன், உத்தரருத்யமாக செய்ய வேண்டிய பகவத் கைங்கர்யமான பலனுக்கு எல்லையாக அமைவது பாகவத கைங்கர்யம். இந்த பலன், பாகவத கைங்கர்யம் வரை என்று சொல்லப்படுவதன் காரணம் இங்கு விளக்கப்படுகிறது.

2. சேதனான ஜீவர்களுக்கும் பரம சேதனான ஸர்வேஸ்வரனுக்கும் உள்ள சம்பந்தத்தை சரீர-ஆத்ம பாவத்தால் சாஸ்த்ரங்கள் விளக்குகின்றன. அதாவது, ஸர்வ சேதனர்களும் (அறிவுள்ளவர்களும்), அசேதனங்களும் (அறிவற்றவைகளும்) பரம சேதன்னுக்கு (ஸர்வேஸ்வரனுக்கு) சரீரம். ஸர்வேஸ்வரன் ஆத்மாவாகிறான்.

'சரீரம்' என்றால் என்ன? கை, கால் போன்ற அவயவங்கள் உள்ளதுவா? அப்படி என்றால், மிருகம்,பாம்பு, பறவை, மீன் போன்றவைகளுக்கு இந்த சரீர இலக்கணம் பொருந்தாதே! அவைகளுள், கை கால் போன்றவை இல்லாதவைகளும் இருக்கின்றனவே !


3. 'யஸ்ய சேதனஸ்ய யத் த்ரவ்யம் ஸர்வாத்மனா ஸ்வார்த்தேஷூ  நியந்தும் தாரயிதும் ஷக்யம் தத் ஸேஷதைக ஸ்வரூபம் தத் தஸ்ய சரீரம். இதரஹ சரீரி' என  ஸ்ரீபாஷ்யம் விலக்ஷணத்வாதி அதிகரணத்தில் அருளினார் பகவத் ராமானுஜர்.

அதாவது, உயிர் வாழ்வன அனைத்துக்கும் பொருத்தமான, சரீர- ஆத்ம இலக்கணங்கள் கீழ் வருமாறு விவரிக்கப் பட்டிருக்கிறது :

# ஆத்மா ஆதாரம் - ஆத்மா இல்லாமல், அதனுடைய சரீரம் நிலை குலையக்கூடியது. ஆக, சரீரம் ஆதேயம்.

# ஆத்மா நியந்தா - ஆத்மாவின் விருப்பப்படியே, அதனுடைய சரீரம் இயங்கக்கூடியது. ஆக, சரீரம் நியாம்யம்.

# ஆத்மா சேஷி - ஆத்மாவின் உபயோகத்திற்காகவே அதனுடைய சரீரம் இருக்கிறது. ஆக, சரீரம் சேஷன்.



மேற் கூறிய இலக்கணத்தினால், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை 'பரமாத்மா' என்றும் அனைத்து லோகங்களில் உள்ள 'சேதன' மற்றும் 'அசேதன' வஸ்துக்களும் அவனுக்கு சரீரம் என்றும் சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. ஆக, ஒரு சரணாகதனும் ஸர்வேஸ்வரனுக்கு சேஷனாகவே இருக்கிறான்.

5. 'பரகத அதிசய ஆதான இச்சயா உபாதேய த்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ச சேஷ: பர: சேஷி' என்று வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸ்ரீ ராமானுஜர் விளக்கி அருளியதன் அர்த்தம்,

'பிறருக்கு சந்தோஷத்தை உண்டு பண்ண வேண்டும் என்ற எண்ணம் எவைகளுக்கு தன்மையோ, அவைகள் சேஷன். சந்தோஷத்தை அடைபவன் சேஷி'. அக, சேஷனான ஒரு சரணாகதன், சேஷியான ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு சந்தோஷத்தை உண்டு பண்ணுவதே தனக்கு தன்மை என உணர்ந்து செயல் பட வேண்டும். இதனால், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு சந்தோஷத்தை உண்டு பண்ணுவது எது என அறிய வேண்டும்.

6. 'உதாரா: ஸர்வ ஏவைதே ஞானித்வாத்மைவ மே மதம்.ஆஸ்தித: ஸஹி யுக்தாத்மா மாமேவாநுக்தமாம் கதிம்' என்று ஸல்வேஸ்வரனான கண்ணன் கீதையில் அருளியபடி,

'கண்ணனை பூஜிப்பவர்களான நால்வரும் கொடையாளர்கள். அதில் ஞானி கண்ணனுக்கு ஆத்மா. இது கண்ணனின் ஸித்தாந்தம்'

என்று ஞானியின் ஏற்றத்தை விளக்கியதாவது,

கண்ணனை பூஜிப்பவர்கள் நால்வர்: (i) இழந்த ஐஸ்வர்யத்தை பெற நினைப்பவன். (ii) புதிய ஐஸ்வர்யத்தை வேண்டுபவன். (iii) தன் ஆத்ம ஸ்வரூபத்தை அநுபவிக்க ஆசைபடுபவன். (iv)கண்ணனயே அடைய விரும்புபவன். அவர்களுக்குள், கண்ணனையே அடைய விரும்பும் ஞானி என்பவன் கண்ணனுக்கு மிகவும் பிரியமானவன். அந்த ஞானி கண்ணனுடனேயே இருக்க ப்ரிய படுபவன். மற்றவர்கள் பலன் கிடைத்ததும் விலகுவார்கள்.

7. ஆக, சேஷியான ஸ்ரீமந் நாராயணனுக்கு எது சந்தோஷத்தை உண்டு பண்ணும் என்பதை, ஞானியை அவன் கொண்டாடும் விதத்திலிருந்து, அறியலாம். ஆக, ஞானியான பாகவதர்களுக்கு கைங்கர்யம் (சேவை) புரிவதனால் அவன் உகக்கிறான் என புலனாகிறது. ஸர்வேஸ்வரனைப் பற்றிய தெளிவும் அவனால் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட செயலும் கொண்ட பாகவதகளுக்கு உகந்து கைங்கர்யம் செய்வது ஸர்வேஸ்வரனின் உகப்புக்கு பெரிய காரணமாகும் என சரணாகதன் உணர வேண்டும்.

ஒரு சரணா கதனுக்கு பா கவத கைங்கர்யமே உத்தர க்ருத்யத்தில் ப்ர தானம்: ( உத்தரம் = பிறகு; க்ருத்யம் = செயல்கள்; உத்தரக்ருத்யம் = சரணாகதி அனுஷ்டானத்திற்கு பிறகு உள்ள செயல்கள்)

1. ஒரு சரணாகதன், உத்தரருத்யமாக செய்ய வேண்டிய பகவத் கைங்கர்யமான பலனுக்கு எல்லையாக அமைவது பாகவத கைங்கர்யம். பாகவத கைங்கர்யமே உத்தரக்ருத்யத்தில் ப்ரதானம் என்று சொல்லப்படுவதன் காரணம் இங்கு விளக்கப்படுகிறது.

2. 'ஆராதனானாம் ஸர்வேஷாம் விஷ்ணோர் ஆராதனம் பரம். தஸ்மாத் பரதரம் ப்ரோக்தம் ததீய ஆராதனம் பரம்' என்று மற்ற தேவதைகளை ஆராதிப்பதைக் காட்டிலும் விஷ்ணுவினுடைய ஆராதனம் மிகவும் உயர்ந்தது. அவ்விஷ்ணுவை ஆராதிப்பதைக் காட்டிலும் அந்த எம்பெருமானின் அடியார்களை ஆராதிப்பது உயர்ந்ததாக சாஸ்த்ரங்கள் கருதுகின்றன.

3. 'மம மத்பக்தபக்தேஷு ப்ரீதி: அப்யதிகா பவேத். தஸ்மாத் மத் பக்தபக்தாஸ்ச பூஜநீயா விசேஷத:' என்று ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் ஐந்தாவது வேதமாகக் கருதப்படுகிற மஹாபாரதத்தில் கூறுகையில்,

'என் அடியார்களிடம் பக்தி உள்ளவர்கள் மீது எனக்கு மிக அதிகமான அன்பு உளது. ஆதலினால் என் அடியார்களை நன்கு பூஜிக்க வேண்டும்' என்கிறான்.

4. 'மத் பக்த ஜந வாத்ஸல்யம் பூஜாயாம் ச அநுமோதநம். மத்கதாஸ்ரவணே பக்திஸ்ஸ்வரநேத்ராங்கவிக்ரியா. ஸ்வயம் ஆராதனே யத்நோ மதர்த்தே டம்பவர்ஜநம். மமாநுஸ்மரணம் நித்யம் யச்ச மாம் நோபஜீவதி. பக்திரஷ்டவிதா ஹ்யேஷா யஸ்மின் ம்லேச்சேபி வர்த்ததே. ஸ விப்ரேந்த்ரோ முநி: ஸ்ரீமான் ஸ யதி: ஸ ச பண்டித:. தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹ்யஹம்' என்று எட்டு வித பக்தி உடையவனைப் பற்றி கருட புராணத்தில் ஸர்வேஸ்வரன் விவரிக்கிறான்:

i) என் பக்தர்களின் தோஷங்களை பொருட்படுத்தாமை
ii) எனக்கு செய்யும் பூஜையை கண்டு மகிழ்தல்
iii) என் சரித்திரங்களைக் கேட்க ஈடுபாடு கொள்ளுதல்
iv) அவதார காலத்தில், ஒரு கர்மவஸ்யனைப் போல் அபிநயிக்கும் என் வரலாற்றை கண்ணீர் பெருகி கேட்பது
v) தவறாமல் ஆராதனம் செய்தல்
vi) தன் சாஸ்த்ர ஈடுபாட்டினால் தற்பெருமை கொள்ளாமல் இருத்தல்
vii) எப்போதும் பகவந் நினைப்புடனே இருத்தல்
viii) என்னிடம் உலக பலன்களை வேண்டாது இருத்தல்

இந்த எட்டு வித பக்தி உடையவன், எந்த வகுப்பைச் சேர்ந்தவனாயினும், அவன் பாகவதனாகவே கருதப் படுவான். என்னைப் போல் அவனும் பூஜிக்கத் தகுந்தவன்.

5. ‘அநந்ய தேவதா பக்தா யே மத் பக்த ஜனப்ரியா: மாமேவ சரணம் ப்ராதாஸ்தே மத் பக்தா: ப்ரகீர்த்திதா:’ என்று ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் ஐந்தாவது வேதமாகக் கருதப்படுகிற மஹாபாரதத்தில் கூறுகையில்,

‘வேறு தேவதைகளிடம் பக்தி அற்றவர்களாயும், என் அடியார்களிடம் அன்பு கொண்டவர்களாயும், என்னிடம் சரணாகதி செய்தவர்களாயும் உள்ளவர்கள் என் பக்தர்கள், அதாவது பாகவதர்கள், எனப்படுவார்கள்’.

6. உலக வழக்கிலும் இதைக் காணலாம். நாம் ஒருவரிடம் அன்பையோ அல்லது உதவியையோ விரும்பினால், அவரைப் பற்றி உயர்வாக பேசுவதை விட, அவருக்கு பிடித்தமான அவர்கள் குழந்தைகளிடம் அன்பை வெளிப்படுத்தினால், அது அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கும் அல்லவா? அதே போலவே, பகவத் ஆராதனத்தைவிட பாகவத ஆராதனம் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு உகப்பைத் தரும் என்கிறது சாஸ்த்ரங்கள். ஆகவே, ஒரு சரணாகதனுக்கு பா கவத கைங்கர்யமே ப்ர தானம்.

பாகவத கைங்கர்யத்தில் பகவான் மகிழும் ப்ரகாரம் :

1. ஒரு சரணாகதன் செய்யும் பாகவத கைங்கர்யத்திலும் மற்ற நித்ய நைமித்திக அனுஷ்டானங்களிலும் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் மகிழும் விதம் இரு வகையாகவே இருக்கின்றன. வேறு தேவதைகளிடம் பக்தி அற்றவர்களாயும், ஸ்ரீமந் நாராயணனின் அடியார்களிடம் அன்பு கொண்டவர்களாயும், அவனிடம் மோக்ஷத்திற்காக சரணாகதி செய்தவர்களாயும் உள்ளவர்கள் பாகவதர்கள் எனப்படுவார்கள் என சாஸ்த்ரங்கள் கருதுகின்றன.

2. ‘தேஷாம் ஞானி நித்ய யுக்த ஏக பக்தி விஷிர்ஷ்யதே. ப்ரியோஹி க்ஞாநிநோர்த்யர்தமஹம் ஸ ச மம ப்ரிய:’ என்று கீதையில் உபதேசிக்கிறான் கண்ணன்.

அதாவது, உலக பலனை எதிர்பார்த்து ஸர்வேஸ்வரனான கண்ணனை பூஜிப்பவர்களை விட, ஸர்வேஸ்வரனான கண்ணனையே (மோக்ஷ பலனை) விரும்புவர்களை ஞானி என்று போற்றுகிறான் கண்ணன். அந்த ஞானியை தனக்கு மிகவும் ப்ரியமானவன் என்றும் கண்ணன் வர்ணிக்கிறான்.

மேலும், கீதையில், ‘உதாரா: ஸர்வ ஏவைதே ஞானீத்வாத்மைவ மே மதம்’ என்ற கண்ணனின் உபதேசத்தில், இந்த ஞானிகள் அவனுக்கு ஆத்மா (அவனை நியமிப்பவன்) எனவும் கூறி அவர்களை கௌரவிக்கிறான். இப்பேர்ப்பட்ட ஞானி என போற்றப்படும் பாகவதர்களை ஆராதிப்பது ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு உகப்பைத் தரும் என்கிறது சாஸ்த்ரங்கள்.

3. ஸர்வேஸ்வரனான கண்ணன் அனைத்து சேதனர்களையும் (ஞானம் உள்ளவர்ளையும்) மற்றும் அனைத்து அசேதனங்களையும் (ஞானம் அற்றவைகளையும்) இந்த உலகிலும் மற்ற இடங்களிலும்( ஸ்வர்கம், ஸத்ய லோகம், பரமபதம் போன்றவைகள்) தனது ஆதார சக்தியாலும், நியமிக்கும் சக்தியாலும், அடிமை கொள்ளும் சக்தியாலும் வழி நடத்துகிறான் என்று ஸகல சாஸ்த்ரங்களும் தெளிவு பட கூறுகின்றன. அகவே அவனே அந்தர்யாமியாக இருந்துக் கொண்டு பரமாத்மாவாகிறான்.

4. அதனால், ‘யே யஜந்தி பித்ரூந் தேவாந் ப்ராஹ்மணாந் ஸஹூதாஸநாந். ஸர்வபூதாந்தராத்மாநம் விஷ்ணுமேவ யஜந்திதே’ என்கிற தக்ஷ ஸ்ம்ருதி வாக்யத்தால் அறியப்படுவது, ‘பித்ருக்களையும், தேவர்களையும், ப்ராம்மணர்களையும், தன் நித்ய நைமித்திக கர்மா அனுஷ்டானத்தின் போது ஆராதிப்பவர்கள் அவர்களுக்கு அந்தர்யாமியான ஸர்வேஸ்வரனையே ஆராதிக்கிறார்கள்’.

ஆக, நாம் செய்யும் ஸந்த்யாவந்தனத்தில் வரும் இதர தேவதைகளின் பெயர்களும் (சூர்யன், அக்னி போன்றவை) மற்றும் தர்ப்பண மந்த்ரத்தில் வரும் ‘வசு, ருத்ர, ஆதித்யன்’ போன்ற சப்தங்களும் ஸர்வ அந்தர்யாமியான விஷ்ணுவையே குறிக்கிறது எனப் பொருள்.

5. உலக வழக்கதிதிலும், சரீரத்தைக் காட்டி ‘நான் சந்தோஷப்படுகிறேன்’ என்ற சொல்லைப் பயன் படுத்தும் போது, அது அந்த சரீரத்திலுள்ள ஆத்மாவையே குறிக்கும். ஞானமற்ற வெறும் சரீரம் சந்தோஷப் பட தகுதி அற்றது. ஆனால் சரீர ஸம்பந்தமான விஷயங்களை கூறும் போது, அதாவது ‘நான் உயரமாக இருக்கிறேன்’ என்று கூறும் போது, அது சரீரத்தையை குறிக்கும். இந்த மாதிரி சரீரத்திற்கும் ஆத்மாவிற்கும் உள்ள பிரிக்க முடியாத ஸம்பந்தத்தினால் இவ்வாறு பேச்சுக்கள் உலக வழக்கத்திலும் உள்ளன. சொல்லுகிற விஷயத்தைக் கொண்டே அது ஆத்மாவை பற்றியதா அல்லது சரீரத்தைப் பற்றியதா என்பதை அறிய முடியும்.

6. அது போலவே, ‘அஹம் ஹி ஸர்வ யஞானாம் போக்தா ச ப்ரபுரேவ ச. ந து மாம் அபிஜாநந்தி அத தத்வேநது ச்யவந்திதே’ என்று கீதையில் உபதேசிக்கிறான் கண்ணன்.

அதாவது, எந்த ஒரு தேவதையை பூஜித்தாலும் ஸர்வ அந்தர்யாமியான கண்ணன் அன்றோ அவர்கள் செய்யும் பூஜைகளை ஏற்று கொள்பவனாயும் பலனை கொடுப்பவனாயும் இருக்கிறான்.

7. ஆக, தன் அடியார்களை, ஒரு சரணாகதன் ஆராதிக்கும் போது, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், தான் உயர்வாக எண்ணம் கொண்டுள்ள பாகவதர்களிடம் காட்டும் ஆராதனம் எனக் கருதி மகிழ்கிறான். ஆனால், அவனால் சாஸ்த்ரத்தில் விதிக்கப் பட்ட நித்ய நைமித்திக கர்மாக்களைச் செய்யும் போது (பாகவதர்கள் அல்லாத இதர தேவதா சப்தங்களை உச்சரிக்கும் போது) தான் இட்ட கட்டளையை நிறைவேற்றுகிறான் என மகிழ்கிறான்.

தொடரும். . .

